O.S. No: 55/2022
பெயர்: ராமலிங்கம்
**பி.சா. 3**
20–11–2025
**குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 ஆவணத்தை கணினியாக்கம் வரைவு செய்தது நான் தான். இந்த ஆவணத்தை இறுதி செய்வதற்கு முன்பாக வரைவு ஆவணம் எத்தனை முறை தயார் செய்யப்பட்டது என்றால் 1 அல்லது 2 முறை தயார் செய்யப்பட்டிருக்கலாம். ஞபாகமில்லை. இந்த ஆவணம் பதிவு செய்வதற்கு 10, 15 நாட்களுக்கு முன்பே வரைவு ஆவணம் தயார் செய்ய ஆரம்பித்துவிட்டோம் என்றால் ஆமாம். இந்த 10, 15 நாட்களும் என் அலுவலகத்திற்கு சோமசுந்தரம் வந்து வரைவுகளை சரிபார்த்தாரா என்றால் மூத்தவர் சண்முகம் தான் வந்தார். நான் ஞாபக மறைதியில் சண்முகம் வந்ததாக சொல்கிறேன் என்றாலும் வரைவை சரிபார்க்க சோமசுந்தரம் தான் வந்தார் என்றால் சரியல்ல. இந்த ஆவணத்தில் எந்தயிடத்திலும் கீழ்புறத்திலுள்ள மாடிபடி இடிக்க வேண்டும் என்று கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணம் எழுதி 1.1/2 மாதம் கழித்து சண்முகம் என்னிடம் வந்து மாடிபடியை இடிக்க வேண்டும் என்று சோமசுந்தரம் சொன்னதாக சொன்னார் என்றால் இல்லை. மாடிபடி இடிப்பது சம்மந்தமாக என்னிடம் சண்முகம் வந்து பேசினாரா என்றால் அவ்வாறு வரவேயில்லை. அவ்வாறு வந்ததாக ஞாபகமில்லை. என்னிடம் சண்முகம் வந்து மாடிபடி இடிப்பது சம்மந்தமாக கேட்டார் என்றாலும் நான் இடிக்க முடியாது என்று தெளிவாக சொல்லுங்கள் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. அனைவரும் சேர்ந்து வந்தால் ஒரு திருத்தல் பத்திரம் போட்டுக்கொள்ளலாம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. நாலு பேரும் ஒன்றாக வந்ததால் தான் திருத்தல் பத்திரம் போடமுடியும் இல்லாவிட்டால் கோர்ட்டுக்கு போங்கள் என்று

நான் தான் சொன்னேன் என்றால் சரியல்ல . 1991 இல் இருந்து பத்திர எழுத்தராக இருக்கிறேன். மனையாக வாங்குபவர்கள் மனையடி சாஸ்தரம் பார்த்து வாங்குவார்கள் என்றால் சரி . மனையின் அளவிற்கு சாஸ்தரத்தில் பலன் உண்டு என்றால் சரி . தெற்கு வடக்காக வா.சா.ஆ. 1 பத்திரத்தில் ஏ செட்டியூலில் தென் வடக்காக 81 அடி போடப்பட்டுள்ளது என்றால் சரி. 81 அடி என்றால் மனை சாஸ்தரத்தில் இடி விழும் என்று உள்ளது என்றால் தவறு . வாதி பத்திரத்தில் சண்முகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நம்பிக்கையின் பேரில் தான் கையெழுத்து செய்தார் என்றாலும் படித்து பார்த்து கையெழுத்து போட்டிருந்தால் 81 அடிக்கு போட்டிருக்கமாட்டார் என்றால் சரியல்ல . என் அலுவலகத்திற்கு வந்தது , பத்திரம் எழுதியது ஆகிய அனைத்து வேலைகளையும் முதல் பிரதிவாதி தான் பார்த்தார் என்றாலும் வாதி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து மட்டும் கையெழுத்து போட்டார் என்றால் சரியல்ல.

**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவித்தனர்.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.